**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No.69/2022 |
| Prosecution Witness | : | **அ.சா.**3 |
| Name | : | **விஜயா** |

**தேதி : 07.04.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை தொடர்ச்சி**

| **கையிருப்பு விடுதல் விபரம்** | | | | | |
|---|---|---|---|---|---|
| **வ. எண்.** | **தேதி** | **நாள்வழி பேரேடு பக்கம்** | **கையிருப்பு குறைத்து கையாடல் செய்த தொகை** | **மோசடிக்கு பொறுப்பான குற்றம் சாட்டப்பட்டவர்கள்** | **மோசடி தொகை ரூ.** |
| 01. | 14.06.2012 | 75 | 35,000.00 | 1. **ரவிச்சந்திரன் (செயலாளர் )**<br>2. **கே.ஆர். சுப்பிரமணியன் (தனி அலுவலர்)** | 35,000.00 |
| 02. | 19.06.2012 | 80 | 121.00 | 1. **ரவிசந்திரன்**<br>2. **வனராஜன் (தனி அலுவலர்)** | |
| 03. | 17.12.2012 | 60 | 63.00 | 1. **ரவிசந்திரன்**<br>2. **வனராஜன்** | 238.00 |
| 04. | 27.02.2013 | 132 | 54.00 | 1. **ரவிசந்திரன்**<br>2. **வனராஜன்** | |
| 05. | 30.08.2013 | 152 | 20.00 | 1. **ரவிச்சந்திரன்**<br>2. **நடராஜன்** | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 06. | 19.12.2013 | 80 | 170.00 | 1. **ரவிச்சந்திரன்**<br>2. **நடராஜன்** | 191.00 |
| 07. | 21.03.2014 | 172 | 1.00 | 1. **ரவிச்சந்திரன்**<br>2. **நடராஜன் (தலைவர்)** | |
| | | | 35,429.00 | | 35,429.00 |

மேற்கண்ட 1வது இனத்தின்படி எதிரிகள் ரூ. 35,429.00 ஐ கையாடல் செய்துள்ளனர்.

**இனம் –2**

சங்க துணைவிதி எண். 19(1)(i)(எ)(4) சங்க செயலாளர் செலவினங்களுக்கு பற்றுசீட்டு வழங்குதல் கடமை, 1983ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்களிங்களின் சட்டம், பிரிவு 64ன்படி கணக்குகள் முறையாக எழுதி, சட்டப்பிரிவு 80ன்படி கீழ்கண்ட செலவினங்கள் ரூ.33,022/– அளவுக்கு வவுச்சர் இல்லாமல் செலவு எழுதி குற்றம்சாட்டப்பட்டவர் 1. ரவிச்சந்திரன் கையிருப்பை குறைத்து குற்றவியல்புடைய நம்பிக்கை மோசடி கையால் ரூ.33,022/– செய்துள்ளார். இதற்கு குற்றம்சாட்டப்பட்டவர் 3. வனராஜன் தனி அலுவலர் சங்கதுணை விதி எண். 19(1)(i)(எ) 2ன்படி சங்க செயலாளருக்கு ரூ.5/–க்கு மேல் செலவு செய்ய அதிகாரம் இல்லாதபோது குற்றம்சாட்டப்பட்டவர் வனராஜன் வவுச்சர் ்இல்லாமல் செலவு எழுத அனுமதித்து அன்றாட வேலை, நிர்வாகத்தை கவனிக்காமல் உடந்தையாக செயல்பட்டு சங்க ஆஸ்திக்கு ரூ.33,022/– அளவுக்கு குற்றம்சாட்டப்பட்டவர்கள் 1. ரவிச்சந்திரன், 2. வனராஜன் ஆகியோர்கள் நிதியிழப்பு செய்துள்ளார்கள்.

| **வ.எண்.** | **தேதி** | **பற்றுசீட்டு விபரம் பற்றுசீட்டு இல்லாமல் செலவு எழுதிய விபரம்** | **தொகை** | **மோசடிக்கு பொறுப்பானவர்கள் குற்றம்சாட்டப்பட்டவர்கள்** | **மோசடி தொகை** |
|---|---|---|---|---|---|
| 01. | 31.07.2012 | **கேன் ரிப்பேர்** | 8,000/- | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 02. | 31.03.2013 | ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு விவரம் | 14,022/- | 1. வனராஜன்<br>2. ரவிச்சந்திரன் | ரூ. 33,022/- |
| 03. | 31.03.2013 | தீபாவளி பண்டிகை முன்பணம் | ரூ.6000/- | | |
| 04. | 31.12.2013 | பொங்கல் போனஸ் | ரூ.5000/- | | |
| | | மொத்தம் | ரூ. 33,022/- | | ரூ. 33,022/- |

இனம் 2ல் எதிரிகள் ரவிச்சந்திரன் மற்றும் வனராஜன் ஆகியோர்கள் இணைந்து மொத்தம் ரூ. 33,022/– ஐ நிதியிழப்பு செய்துள்ளார்கள்.

**<u>இனம் 3</u>**

ரவிச்சந்திரன் சங்க செயலாளர் 08.06.2012ம் தேதி நாள்வழிபேரேடு பக்கம் 69ம் பக்கம் எழுதும்போது செலவு பக்கம் ரொக்க காலத்தில் செலவு ஏதும் காட்டாமல் வவுச்சர் ஏதும் இல்லாமல் கூடுதல் ரூ. 30,000/– எழுதி சங்க கையிருப்பிலிருந்து ரூ.30,000/–ஐ அவரது சொந்த உபயோகத்திற்கு எடுத்து கையாடல் செய்துள்ளார். மேலே விளக்கியுள்ளபடி கே.ஆர். சுப்பிரமணியன் (தனி அலுவலர்) சங்க கையிருப்பு மற்றும் அன்றாட கணக்குகள் சரிபார்க்கவேண்டியது சங்க துணைவிதியின்படி கடமையாகும். இவரது கடமை மற்றும் பொறுப்பில இருந்து கே.ஆர். சுப்பிரமணியன் விலகி உடந்தையாக செயல்பட்டு ரவிச்சந்திரன் ரூ.30,000/– கையாடல் செய்ய அனுமதித்துள்ளார். எனவே ரவிச்சந்திரன் மற்றும் கே.ஆர். சுப்பிரமணியன் ஆகியோர்கள் மேற்படி தொகைக்கு பொறுப்பாவார்கள்.

**இனம் 4**

நுகர்பொருள் கடன் பணியாளர்களுக்கு வழங்கவேண்டுமானால் அவர்கள் முறைப்படி மனு கொடுத்து கொட்டேசன் பெற்று கொடுக்கவேண்டும். இதனை தனி அலுவலர் அனுமதிக்கவேண்டும். ஆனால், ரவிச்சந்திரன் எந்த ஒரு ஆவணம் தனி அலுவலர் அனுமதியின்றி 31.03.2013 ம் தேதி அன்று சங்க கையிருப்பினை குறைத்து வவுச்சர் ஏதும் இல்லாமல் நேரடியாக

நாள்வழிபேரேட்டில் செலவு நுகர்பொருள் கடன் எம். செல்லமுத்து வென்டார் ரவிச்சந்திரன் செயலாளர் ஆகிய இருவரும் நபர் ஒருவருக்கு ரூ.10,000/- வீதம் ரூ.20,000/- பொய் கணக்கு எழுதி சங்க கையிருப்பிலிருந்து ரூ.20,000/-த்தை திட்டமிட்டு எடுத்து நம்பிக்கை மோசடி மற்றும் கையாடல் செய்துள்ளார்கள். இதற்கு தனி அலுவரான வனராஜன் மேற்படி செயலுக்கு உடந்தையாக இருந்துள்ளார். மேற்படி ரவிச்சந்திரன் மற்றும் வனராஜன் ஆகிய இருவரும் மேற்படி தொகைக்கு பொறுப்பாவார்கள்.

**<u>இனம் 5</u>**

சங்க செயலாளர் ரவிச்சந்திரன் அவர்கள் கடந்த 17.08.2012ம் தேதி நாள்வழிபேரேட்டில் இன்சூரன்ஸ் கம்பெனியில் பணம் ஏதும் கட்டாமலேயே குரூப் இன்சூரன்ஸ் பணம் ரூ. 7,000/- கட்டியதாக சங்க கையிருப்பிலிருந்து ரூ.7,000/-த்தை எடுத்து நம்பிக்கை மோசடி மற்றும் கையாடல் செய்துள்ளார். இதற்கு தனி அலுவலர் வனராஜன் பற்றுச்சீட்டு எதுவும் கொடுக்காமல் பொய் கணக்கு எழுத ரவிச்சந்திரன் அவர்களுக்கு உடந்தையாக இருந்துள்ளார். மேற்படி தொகைக்கு ரவிச்சந்திரன் மற்றும் வனராஜன் ஆகியோர்கள் பொறுப்பாவார்கள்.

**<u>இனம் 6</u>**

ஆர்.614 திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிமிடெட் திருச்சி 23ல் 2012-2013 ஆண்டு தீவனம் ரூ.3,78,957/-க்கு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. அந்த தீவனத்தை விற்பனை செய்த பணத்தை கணக்கிற்கு கொண்டுவராமல் சங்க இருப்பு பதிவேட்டில் பதிவு செய்யாமலும் ரூ.3,78,957/-த்தை சங்க செயலாளர் ரவிச்சந்திரன் சங்கத்திற்கு நிதியிழப்பு செய்து கையாடல் செய்துள்ளார். மேற்படி கையாடலுக்கு தனி அலுவலர் வனராஜன் உடந்தையாக இருந்துள்ளார். மேற்படி தொகைக்கு இருவரும் பொறுப்பாவார்கள்.

ஆர்.614 திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிமிடெட் திருச்சி 23ல் 2013-2014 ஆண்டு தீவனம் ரூ.1,10,025/-

க்கு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. அந்த தீவனத்தை விற்பனை செய்த பணத்தை கணக்கிற்கு கொண்டுவராமல் சங்க இருப்பு பதிவேட்டில் பதிவு செய்யாமலும் ரூ.1,10,025/–த்தை சங்க செயலாளர் ரவிச்சந்திரன் சங்கத்திற்கு நிதியிழப்பு செய்து கையாடல் செய்துள்ளார். மேற்படி கையாடலுக்கு தலைவர் நடராஜன் உடந்தையாக இருந்துள்ளார். மேற்படி தொகைக்கு இருவரும் பொறுப்பாவார்கள். மேற்படி இனம் 6ல் ரூ.4,88,982/–ஐ செயலாளர் ரவிச்சந்திரன் தனி அலுவலர் வனராஜன், தலைவர் நடராஜன் ஆகியோர்கள் கையாடல் செய்துள்ளார்கள். மேற்படி தொகைக்கு மேற்படி மூவரும் பொறுப்பாவார்கள்.

**<u>இனம் 7</u>**

2012–2013 ஆண்டில் ஒன்றியத்திலிருந்து ரூ.5,769.99/–க்கு நெய் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி கொள்முதல் செய்யப்பட்ட நெய்யை செயலாளர் ரவிச்சந்திரன் விற்பனை செய்து இருப்பு பதிவேட்டிற்கு கொண்டுவராமல் மேற்படி தொகையை தன்னுடைய சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்தி கையாடல் செய்துள்ளார். இந்த செயலுக்கு தனி அலுவலர் வனராஜன் கணக்கு வழக்கை சரிபார்க்காமல் உடந்தையாக செயல்பட்டுள்ளார். மேற்படி சங்க நிதியிழப்புக்கு செயலாளர் ரவிச்சந்திரன் மற்றும் தனி அலுவலர் வனராஜன் ஆகியோர்கள் பொறுப்பாவார்கள்.

**<u>இனம் 8</u>**

18.03.2013ம் தேதி சங்க செயலாளர் ரவிச்சந்திரன்அவர்கள் பற்றுச்சீட்டு இல்லாமல் முன்பணம் ஏதும் இல்லாமல் ரூ.2,000/– பொய் கணக்கு எழுதி சங்க கையிருப்பிலிருந்து எடுத்து தனது சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்தி கையாடல் செய்துள்ளார். மேற்படி செயலுக்கு தனி அலுவலர் வனராஜன் தனது பணியை மேற்பார்வை செய்யாமல் அவருக்கு உடந்தையாக செயல்பட்டுள்ளார். மேற்படி கையாடல தொகை ரூ.2,000/–க்கு செயலாளர் ரவிச்சந்திரன் மற்றும் தனி அலுவலர் வனராஜன் ஆகியோர்கள் பொறுப்பாவார்கள்.

**இனம் 9**

சங்க செயலாளர் ரவிச்சந்திரன் மற்றும் தலைவர் நடராஜன் ஆகிய இரண்டு பேரும் உறுப்பினர்களுக்கு வழங்க வேண்டிய ஊக்கத்தொகையை பதிவேடு ஏதும் பேணாமல் 29.10.2013 ஊக்கதொகை செலவு ரூ.1,68,764.80/– 24.01.2014 ஊக்கதொகை செலவு ரூ.50,150.50/– என ஆக மொத்தம் ரூ. 2,18,915.30/– ஐ நாள்வழிபேரேட்டில் பக்கம் 29 மற்றும் 116 ஆகியவற்றில் பொய் கணக்கு எழுதி கையாடல் செய்துள்ளார்கள். மேற்படி தொகைக்கு சங்க செயலாளர் ரவிச்சந்திரன், தலைவர் நடராஜன் ஆகிய இரண்டு பேரும் பொறுப்பாவார்கள். ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டி முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.